4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **170/2020** நாள்: **01.09.2025** வா.சா.**1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பாஸ்கரன்** | தொழில் | : | துணை மேலாளர், சுகர் பேக்டரி |
| த/பெ | : | ராமானுஜம் | கிராமம் | : | பாகல்கோட் |
| வயது | : | 57 | தாலுகா | : | பாகல்கோட் |
| | | | மாநிலம் | : | **கர்நாடகா** |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 07.03.1984 தேதியிட்ட பாக பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.2 – எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் அசல்

வா.சா.ஆ.3 – எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் நகல்

வா.சா.ஆ.4 – தாவா சொத்து சம்பந்தப்பட்ட கணினி பட்டா பதிவிறக்க நகல்

வா.சா.ஆ.5 – பிரதிவாதிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்

வா.சா.ஆ.6 – 17.05.2013 தேதியிட்ட உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.<br><br>Sd/-M.Nambirajan.<br>4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>உடுமலைப்பேட்டை. |